## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 62 ஆம் இலக்க, ஆதுலர் மனைகள் (ஒழுங்குபடுத்தல்) (திருத்தச்) சட்டம்

---

*[1988, திசெம்பர் 17 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1988, திசெம்பர் 23 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 30 — தபாற் செலவு : சதம் 75

**1988 ஆம் ஆண்டின் 62 ஆம் இலக்க, ஆதுலர் மனைகள் (ஒழுங்குபடுத்தல்) (திருத்தச்) சட்டம்**

[1988, திசெம்பர் மாதம் 17 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 58/87

ஆதுலர் மனைகள் (ஒழுங்குபடுத்தற்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1988 ஆம் ஆண்டின் 62 ஆம் இலக்க, ஆதுலர் மனைகள் (ஒழுங்குபடுத்தல்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆதுலர் மனைகள் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :— *220 ஆம் பிரிவின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்*

(அ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் உள்ள "நூறு ரூபாய்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பத்தாயிரம் ரூபாய்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் உள்ள "ஐம்பது ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இரண்டாயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

3. (1) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப்பட்ட திருத்தமானது, எல்லா நோக்கங்களுக்குமாக 1987 சனவரி 01 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கருதப்படல் வேண்டும். *திருத்தத்தின் கடந்தகாலத்தையும் உள்ளடக்கிய தான பயன்.*

(2) 1987 சனவரி 01 ஆம் தேதியன்று தொடங்கி இச்சட்டத்தின் தொடக்கத் தேதியன்று முடிவடையும் காலத்தின்போது ஆதுலர் மனையொன்று முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்குமிடத்து, அல்லது ஆதுலர் மனையொன்றின் தொடர்பிலான பதிவு புதுப்பிக்கப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய மருத்துவ மனையின் உரிமையாளர்—

(அ) இச்சட்டத்தின்மூலம் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் விடயத்துக்கேற்றவாறு, அத்தகைய பதிவு தொடர்பில் அல்லது புதுப்பித்தல் தொடர்பில் செலுத்துவதற்கு அத்தகைய உரிமையாளர் தேவைப்படுத்தப்பட்ட தொகைக்கும் ; அத்துடன்

(ஆ) விடயத்துக்கேற்றவாறு, அத்தகைய பதிவு அல்லது புதுப்பித்தல் தொடர்பில் அத்தகைய உரிமையாளரால் செலுத்தப்பட்ட தொகைக்கும்,

இடையிலான வித்தியாசத்தை, இச்சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து ஒரு மாத காலத்துக்குள் பணிப்பாளருக்குச் செலுத்துதல் வேண்டும்.

ஆதுலர் மனையொன்றின் உரிமையாளரால், இச்சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து ஒரு மாத காலத்துக்குள் அத்தகைய வித்தியாசத்தைச் செலுத்துவதற்குத் தவறுதல் ஆனது, முதன்மைச் சட்டவாக்கத்திலுள்ள எதற்கும் முரணாக எது எப்படியிருப்பினும். அத்தகைய ஆதுலர் மனையின் பதிவை இல்லாதொழிப்பதற்கான ஏதுவாகுதல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 177 ; (வெளிநாடு) ரூபா 236 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.